**அரசுத் தேர்வுகள் இயக்ககம் – சென்னை –06**

**தேசிய வருவாய்வழி மற்றும் தகுதி படிப்புதவித் தொகை தேர்வு**
**(NMMS EXAMINATION)**
**தேர்வு முடிவுகள் வெளியிடுதல்**

**செய்திக்குறிப்பு**

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் 8–ஆம் வகுப்பு மாணவர்களுக்கான 2024–2025 ஆம் கல்வியாண்டிற்கான தேசிய வருவாய்வழி மற்றும் தகுதி படிப்புதவித் தொகை பெறுவதற்கான தேர்வு (NMMS EXAMINATION – FEB 2025) 22.02.2025 அன்று நடைபெற்றது. இத்தேர்வெழுத 2,30,345 மாணாக்கர்கள் விண்ணப்பித்தனர்.

இத்தேர்வின் முடிவுகள் 12.04.2025 அன்று பிற்பகல் வெளியிடப்படவுள்ளது. எனவே, தேர்வெழுதிய மாணவர்கள் www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் Result என்ற தலைப்பில் சென்று தேசிய வருவாய்வழி மற்றும் தகுதி படிப்புதவித் தொகை பெறுவதற்கான தேர்வு (NMMS EXAMINATION) முடிவுகள் பிப்ரவரி 2025 என்ற பக்கத்தில் தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதியினை உள்ளீடு செய்து தாங்கள் பெற்ற மதிப்பெண்களை அறிந்து கொள்ளலாம். மேலும் இத்தேர்விற்கான ஊக்கத் தொகை பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பட்டியலும் இவ்விணையதளத்திலே National Means Cum Merit Scholarship Scheme Examination என்ற பக்கத்தில் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/–
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை –6

நாள் :– 11.04.2025.
இடம் :– சென்னை